கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம்
Coventry Tamil Welfare Association

http:// HYPERLINK http://www.tamils.org.uk
www.tamils.org.uk
Email: coventrytamils2002@gmail.com
Mobile no:- 07823535094
தலைவர்:- சிவத்தமிழ் காவலன் க.அரியரத்தினம்.

வைகாசி மாத இதழ்
NEWS BULLETIN
MAY 2026
ஆக்கம்:- ஸ்ரீ.பகீரதன்

நாள்	நிகழ்வு
11/04 – 28/06	கொவன்றி தமிழ்மொழிக் கலைக் கழகம் சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் MEADOW PARK SCHOOL ABBEY RD, COVENTRY CV3 4BD எனும் முகவரியில் நடைபெறுகின்றது
13/06	தமிழ்த்திறன் பரிசளிப்பு விழா
13&20 /06/26	பிரித்தானிய தமிழ்ப் பரீட்சைச் சபையின் பேச்சுப் பரீட்சை
27/06	பிரித்தானிய தமிழ்ப் பரீட்சைச் சபையின் ஆண்டுப் பரீட்சை
04/07	வருடாந்த இல்ல விளையாட்டு விழா

SATURDAYS	Time
Tamil	9.50am-12.30pm
Free Karate (Mr. Prathith.P teacher)	12.30pm – 2.30pm
Vocal (Mr. Dheenadayalan.P teacher)	12.30pm – 2.30pm
Keyboard (Miss. Tiffany.L teacher)	12.30pm – 4.00pm
Bharathanatiyam (Mrs. Ajantha.K teacher)	1.00pm – 5.00pm
Free Yoga Class (அருள்நிதி. Gowrisankar.D teacher)	12.30pm – 2.30pm
Free 11plus Verbal & Nonverbal Reasoning (Mrs. Gayathri Krish teacher)	2.00pm – 4.00pm
SUNDAYS	**Time**
Tamil	10.00am – 12.00pm
Bharathanatiyam (Mrs. Sathyagowri.J teacher)	10.00am – 3.00pm
Vocal (Mrs. Vanathy.S teacher)	9.00am – 1.00pm
Violin&Veena (Miss. Varani.S teacher)	9.00am – 2.00pm
Keyboard (Miss. Tiffany.L teacher)	11.30am – 2.30pm
Miruthangam (Mr.Wijayarajah.M teacher)	12.00am – 1.00pm
Free Miruthangam Online (Mr. Thillaiampalam Narendra teacher)	1.00pm – 3.00pm
Free 11plus Maths (Mr.Krish teacher)	9.00am – 11.00am



முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

2009 வைகாசி மாதம் முள்ளிவாய்க்கால் மண்ணில் நடைபெற்ற இனவழிப்பானது, தமிழினத்தின் வரலாற்றில் ஒரு மாறாத வலியைக் கொடுத்திருக்கின்றது. கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் தமிழ்ப் பாடசாலையான கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழகத்தில், அன்றைய நாட்களின் அவலங்களை நினைவுகூர்ந்ததோடு, அஞ்சலியும் செலுத்தப்பட்டது.







கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின் நிர்வாக அலுவலர் திருமதி சிவகலா சுரேஷ்தாஸ் முள்ளிவாய்க்கால் அனுபவங்களைப்

பகிர்ந்திருந்தார். முள்ளிவாய்க்காலின் இறுதி நாட்களில், மக்கள் பட்ட இன்னல்கள் அடங்கிய காணொளியும் காண்பிக்கப்பட்டது.





தமிழ்ப் பாடசாலை முடிவடைந்ததும், அனைவருக்கும் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது.



பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், நிர்வாக உறுப்பினர்கள், நலன்விரும்பிகள் எனப் பலரும் உணர்வுபூர்வமாகக் கலந்துகொண்டனர்.

கதம்பம் பல்சுவை நிகழ்ச்சி

World peace and Harmony அமைப்பினரால் உலகெங்கிலுமுள்ள ஆர்வலர்களை இணைத்து பிரதி வியாழக்கிழமைகளில் இரவு 8 மணிக்கு Zoom இணைய வழியில் நடாத்தப்படும் கதம்பம் பல்சுவை நிகழ்ச்சியில், கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழக மாணவர்களும் கலந்துகொண்டு, தங்கள் திறமைகளை வெளிப்படுத்தி வருகின்றனர். எமது பாடசாலை நிகழ்வுகளை, நிர்வாக அலுவலர் திருமதி பொன்மணி ஜெய்கணேஷ் அவர்கள் தொகுத்து வழங்கி வருகின்றார்.



07/05/2026 அன்று நடைபெற்ற கதம்ப நிகழ்வில், செல்வன் ஆதிரன் றமேஸ் (தரம்-2) 'தாயப்பாசம்' என்ற தலைப்பில் கவிதையையும், செல்வி மாதுரி பகீஸ்வரன் (தரம்-4) 'கல்வி' என்ற தலைப்பில் கவிதையையும், செல்வி சர்மி வினோதன் (தரம்-2) கொன்றை வேந்தனையும், செல்வன் லதுஷன் திருவரங்கன், லக்ஸன் திருவரங்கன் ஆகியோர் பாடலையும் வழங்கியிருந்தனர்.










14/05/2026 அன்று நடைபெற்ற கதம்ப நிகழ்வில், செல்வி ஸ்ரீயா ஸ்ரீராம் (தரம்-1) தேவாரத்தையும், செல்வன் மிதுன்சன் ராஜன் (தரம்-1) 'அம்மா' என்ற தலைப்பில் கவிதையையும், தரம் 8 ஐச் சேர்ந்த செல்விகள் நிவிசா ஸ்ரீகாந்தராஜா, கவிநயா சுரேஸ்தாஸ், செல்வன் றெதுசன் ரவீந்திரன் ஆகியோர் 'அறிவே ஆற்றல்' என்ற













தலைப்பில் கவிதையையும், சுரத்தட்டு ஆசிரியை "கலாஜோதி" செல்வி ரிஃபனி லோரன்ஸ் அவர்களின் மாணவன் செல்வன் ரித்விக் ருத்ரா சுரத்தட்டு இசையையும் வழங்கியிருந்தனர்.

21/05/2026 அன்று நடைபெற்ற கதம்ப நிகழ்வில், செல்வன் அர்ஷ்வின் வினோதன் (பாலர்-2) "கண்ணே கரும்பே" என்ற பாடலையும், செல்வன் ஆதீஷன் பகீஸ்வரன் (பாலர்-2) திருக்குறளையும், செல்வி திவ்யா நக்கீரன் (தரம்-7) "உடற்பயிற்சியும் உடல்நலமும்" என்ற தலைப்பில் பேச்சையும், சுரத்தட்டு ஆசிரியை கலாஜோதி செல்வி ரிஃபனி லோரன்ஸ் அவர்களின் மாணவன் செல்வன் சஜித் கேதீஸ்வரன் சுரத்தட்டு இசையையும் வழங்கியிருந்தனர்.











28/05/2026 அன்று நடைபெற்ற கதம்ப நிகழ்வில், செல்வன் சாயிசன் ஆனந்த் (பாலர் -1) "தோ தோ நாய்க்குட்டி" என்ற பாடலையும், செல்வி நிஷ்விகா நிதர்ஷன் (பாலர்-1) தேவாரம், திருக்குறள், பாடல்களையும், செல்வி அம்றிதா சந்திரமோகன் (தரம்-06) "பத்தியால் யானுனைப் பலகாலும் ....." "முத்தை தரு..." என்ற திருப்புகழ்களையும் வழங்கியிருந்தனர்.









பெற்றோர் கலந்துரையாடல்

. 09/05/2026 அன்று காலை 10.30 மணிக்கு Meadow Park பாடசாலையில், விளையாட்டு விழா மற்றும் பாடசாலை வளர்ச்சி சம்பந்தமான பெற்றோர் கலந்துரையாடல் நடைபெற்றது.







ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்

09/05/2026 அன்று மதியம் 12.30 மணிக்கு Meadow Park பாடசாலையில், விளையாட்டு விழா மற்றும் பிரித்தானிய தமிழ்ப் பரீட்சைச் சபையின் பரீட்சை சம்பந்தமான ஆசிரியர் கலந்துரையாடல் நடைபெற்றது.





இலவச யோகா வகுப்பு



தமிழ்ப் பாடசாலையில், சனிக்கிழமைகளில் மதியம் 12.30 மணிக்கு "அருள்நிதி" திரு கௌரிசங்கர் தேவராஜ் ஆசிரியர் மூலம் நடைபெற்று வருகின்றது. இந்த வகுப்பில் பெற்றோர்கள், ஆசிரியர்கள் மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு பயன்பெற்று வருகின்றார்கள்.



ஈழத்து புலமைகள் (பாகம் 35)

கடந்த சில வாரங்களாக, நல்லை நகர் தந்த சைவத்தமிழ்க்காவலன் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களின் சைவத்தமிழ் சேவைகள் பற்றி எழுதி வருகிறேன். அதன் தொடர்ச்சியாக இவ்வாரமும் அன்னாரது சேவையின் ஒரு பகுதியைக் காணலாம்.

ஆறுமுக நாவலர் (தொடர்ச்சி)

திருவாவடுதுறை ஆதீனத்து மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் பாராட்டி வழங்கிய சிறப்புக் கவிதைகளில் இன்னொன்றையும் பார்ப்போம்.

"நீடுபுகழ்த் திருக்கேதீச்சரந்
திருக்கோணாசலமிந் நிலவா நின்ற
நாடுபுகழ் தலம்பொழி யாழ்ப்
பாணத்துனல்லூர் வாழ்நகராக் கொண்டோன்
தேடுபுகழுருவமைந்த கந்த வேடலத்துதித்த
செல்வந் யாரும் பாடு புகழாறுமுக
நாவலனவ் வாறச்சிற் பதிப்பித்தானே"

. இவராற் பரிசோதிக்கப்பட்ட சேனாவரையர் உரை, சி.வை.தாமோதரம் பிள்ளையவர்களால் பதிப்பிக்கப்பட்டது.

இலக்கணக் கொத்து, தொல்காப்பிய சூத்திர விருத்தியுடன் இன்னும் சில நூல்களும், திருவாவடுதுறை ஆதீனத்து சந்நிதானமாயிருந்த ஸ்ரீலஸ்ரீ சுப்ரமண்ய தேசிகர் அவர்கள் விரும்பியவாறு நாவலராற் பதிப்பிக்கப்பட்டதென்பர்

அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் மட்டுமின்றி தமிழ் நாட்டிலும் நாவலரின் பிரசங்கம் பிரபலமாயிற்று. எழுத்துப் பிழையின்றி, இலக்கணப்பிழையின்றி எழுதுவதும், மாத்திரை அளவு தவறாது பேசுவதும், நாவலரின் சிறப்பு மட்டுமின்றி யாழ்ப்பாணத்தின் சிறப்புமாகும்.

திருவாவடுதுறை ஆதீனத்தில் பிரசங்கஞ் செய்தபோது அங்கு அதனைச் செவியுற்ற ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகரும், ஸ்ரீலஸ்ரீ சுப்ரமண்ய தேசிகரும், மற்றைய ஆதீன வித்துவான்களும் இணைந்து நாவலர் எனும் சிறப்பு பட்டமளித்துக் கௌரவித்தனர்

இராமநாதபுரம் பொன்னுசாமித்தேவர் அவர்களும் நாவலரை தமது சபையிலே பிரசங்கம் செய்வித்துக் கேட்டு மகிழ்ந்து பல பரிசில்களை வழங்கிக் கௌரவித்தனர்.

எழுத்துக் குறியீடுகளைச் சரியாகப் பாவித்து இலக்கணத் தெளிவுற எழுதக்கற்றுக் கொடுத்தவர் நாவலரே! நாவலர் செய்யுள் நடையில் நூல்களை எழுதாவிட்டாலும் அவர் செய்யுள் யாப்பதில் வல்லவர் என்பதற்கு ஒரு உதாரணமாக அவரது செய்யுள் ஒன்றைக் காண்போம்.

"சீர்பூத்த கருவினூலுணர்ச்சி தேங்க
சிவம் பூத்த நிகமாக மங்களோங்க
பார்பூத்த புறச்சமய விருள்கணீங்க
பரம் பூத்த சைவனிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவாந்த்த திந்து துங்க
பிறைபூத்த சடை மௌலிப் பிரானார் தந்த
வார்பூத்த வறிலிச்சை தொழிலென்றோதும்
மதம் பூத்த வி நாயகன்றாள் வணங்கி
வாழ்வாம்"

உசாத்துணை நூல்கள்;

ஆறுமுக நாவலர் சரித்திரம்- ஸ்ரீமான். .த. கைலாசபிள்ளை.

ஆறுமுக நாவலர் புராணம்; அருணாசலக் கவிராயர். நன்றி _ யாழ் நூலகம்.

ஆக்கம்
திரு மாணிக்கம் தவத்துரை (தேவா) ஆசிரியர்

